**செய்தி வெளியீடு எண்:216** **நாள்:03.06.2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று **(3.6.2021)** தலைமைச் செயலகத்தில், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஏற்கனவே உள்ள ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய **1000** படுக்கைகளுடன், கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள **300** ஆக்ஸிஜன் படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தஞ்சாவூரிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாக்கோட்டை க. அன்பழகன், திரு. துரை. சந்திரசேகரன், திரு. என்.அசோக்குமார், திரு.டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ், இ.ஆ.ப., ஆகியோரும், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**